## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## கோயமுத்தூா் மாவட்ட வானிலை சாா்ந்த வேளாண் அறிக்கை
## (19.09.2015 முதல் 23.09.2015)

**அறிக்கை எண் 73/2015** **தேதி: 18.09.2015**

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 31°செ முதல் 39°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 23°செ முதல் 29°செஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 17°செ முதல் 21°செஆகவும், இரவு நேர வெப்பநிலை 10°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது. தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் இலேசான மழை காணப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (19.09.2015 முதல் 23.09.2015)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். மிதமானது முதல் கன மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 76-85 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 60-76 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 19.09.15 | 4 | 34 | 24 | 5 | 76 | 60 | 20 | தென்மேற்கு |
| 20.09.15 | 5 | 34 | 24 | 5 | 79 | 66 | 20 | தென்மேற்கு |
| 21.09.15 | 7 | 33 | 23 | 7 | 82 | 68 | 20 | தென்மேற்கு |
| 22.09.15 | 38 | 32 | 22 | 7 | 85 | 76 | 20 | தென்மேற்கு |
| 23.09.15 | 8 | 32 | 22 | 7 | 84 | 70 | 20 | தென்மேற்கு |

**வேளாண் அறிவுரை**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழை பெய்தவுடன் மானாவாரியில் பருப்புமற்றும் தானிய வகைகள் விதைப்பினை மேற்கொள்ளவும்.
- ✓ அதிக மழை எதிர்பார்க்கப்படுவதால் நடவு செய்து ஒரு மாதமான இறவை கம்போடியா பருத்தியில் கைக்களை மற்றும் கொத்துக்களை எடுத்த பிறகு போதிய வடிகால் வசதி ஏற்படுத்தவும்.
- ✓ தென்னை மரத்தினை சுற்றியுள்ள பாத்திகளை ஆழப்படுத்துவதன் மூலம் மழை நீரினை வீணாகாமல் சேகரிக்கலாம்.
- ✓ காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் ஐந்து மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ தொடர்ந்து மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா நெல் நடவினை தள்ளிப்போடவும்.

**குறுஞ்செய்தி**

- ✓ எதிர்பார்க்கப்படும் மழை பெய்தவுடன் மானாவாரியில் பருப்புமற்றும் தானிய வகைகள் விதைப்பினை மேற்கொள்ளவும்.

**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை.**